

அரங்கனாய் பாவித்த அரசன்

அரங்கனாகப் பாவித்த அரசன்

பூவிழி

"ஒரு வினோதமான கல்வெட்டு இருக்கிறதாம் இங்கே" என்று ஆரம்பிக்கிறார் நண்பர். "இந்த ஆண்டாள் எப்படித் தன்னை ஆண்டவனின் காதலியாகவே பாவித்துக் கொண்டிருந்தாளோ அப்படியே ஒரு ராஜாவும் தன்னை அந்த ஆண்டாளை மணந்த அரங்கனாகவே பாவித்துக் கொண்டிருந்திருக்கிறான். அவனுக்கும் அவளுக்குமிடையில் அப்படி ஒரு பாவத் தொடர்பைக் காட்டும் கல்வெட்டு இந்தக் கோவிலில் இருக்கிறது."

ஆச்சர்யமாக இருக்கிறது, இந்தப் புதுக்கதை. ஏதோ ஒரு இருண்ட சரித்திர மூலைகளில் ஒளி விழுவது மாதிரித் தோன்றுகிறது. நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிறோம் அந்தப் புதிய கதையைக் கேட்க.

அந்த ராஜா பெயர் உறங்காவல்லிதாசன். மகாபலி வாணாதிராயன்! இவன் காலம் சகம் 1375. அதாவது அந்த வருஷத்துக் கல்வெட்டு அது. சகவருஷம் 1375. ஸ்ரீமுக ஆண்டில் இந்த கல்வெட்டு (1454 மார்ச் மாதம் 13ஆம் தேதி) பொறிக்கப்பட்டிருக்கிறது.

திடியன் என்கிற திருவரங்கநல்லூரை இவன் இந்தக் கோயிலுக்குத் தானமாக அளித்ததைக் கூறுகிறது இந்தக் கல்வெட்டு. இந்தக் கல்வெட்டில் அரசன் தன்னையே அரங்கநாதனாகப் பாவித்துக் கொண்டிருக்கிறான்.

புதுவை ஸ்ரீவிஷ்ணு சித்தர் கோதைக்கு அரங்கநாதர் அனுப்பிய பிரணயப் பத்திரம் ஒன்று திருவரங்கப் பெருநகரில், சேரனைவென்றான் மண்டபத்தில் சுந்தரபாண்டியன் பந்தலின் கீழ் அரியராயன் கட்டிலில் வீற்றிருக்கும் போது தானம் செய்யப்பட்டதாம்.

காதல் மீதூற அரங்கநாதரே ஆண்டாளுக்கு நிறைய வரிசைகள் கொடுத்து அனுப்பினாராம். அதிலே இந்தத் திடியன் என்கிற ஊரும் ஒன்றாம். கோதை வீட்டிலிருந்து அர்ச்சகர், குடவர், கோவணவர், தண்டெப்பார், ஸ்ரீராமானுகூட

உடையர் முதலியவர்கள் வந்து சன்மானங்கள் செய்து, சாசனம் (கடிதம்) வாசித்துக் காட்டினார்களாம்.

அதிலே பதினாறாமாயிரவர் பாத அணிகளுடன் பெரிய மண்டபத்தில் (ஆண்டாளை மறந்து) வினோதித்து வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்ததாம்.

இதைக் கேட்டு அரங்கனுக்கு மிகுந்த மனக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டதாம்.

“அதெல்லாம் இல்லை. நான் என்றும் உன்னுடையவன்தான்” என்று சொல்லி, தன்னுடைய பல்லக்கு, தன்னுடைய நீண்ட தார்பூணும் கண்டமாலை, பட்டுப் பருத்தி, சுகந்த திரவியங்கள் எல்லாம் கொடுத்துத் தன் காதலை நிரூபித்தானாம். அப்போது இந்தப் பொருள்களுடன் சேர்த்துத் திடியன் என்கிற திருவரங்கநல்லூரரையும் அனுப்புகிறான்.

உண்மையில் உறங்காவல்லிதாசனே இந்தத் தானத்தைச் செய்கின்றான். ஆனால் ஒரு கவித்துவ அழகுடன் இந்தத் தானத்தை ஆண்டாளின் தெய்விகக் காதலைப் போற்றுகிற விதமாகத்தான் வாசகத்தை அமைத்திருக்கிறான்.

இந்தக் கல்வெட்டிலே இன்னொரு விசேஷம் என்னவென்றால், இதிலே ஆண்டாள் பாசுரங்களிலே இருந்து ஏராளமான வரிகள் ‘எடுத்தாள’ப் பட்டிருப்பதுதான்.

பல சினிமாப் பெயர்களைச் சேர்த்து நாம் ‘கதை’ பண்ணி சந்தோஷப்படுவதில்லையா? அதே மாதிரி வில்லிபுத்தூரிலிருந்து வந்த சாசன ஓலையிலே காணப்படுவதாக உள்ள வாக்கியங்கள் எல்லாம், வில்லிபுத்தூர் கோதையே தன் பாடல்களில் சொன்ன வார்த்தைகளால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அழகான கல்வெட்டு படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. வரிக்கு வரி படித்து அனுபவிக்க வேண்டிய அரிய, அழகிய சாசனம்.

இந்தக் கல்வெட்டை முதன் முதலில் ஆராய்ந்து பிழை திருத்தி, செப்பமாக்கியவர் கோவைக்கிழார் இராமச்சந்திரஞ் செட்டியார். பேரூர் சாந்தலிங்கர் கல்வி அறநிலைய ஆண்டு மலர் ஒன்றில் இது வெளியாகியிருக்கிறது.

ஏதத் திரைலோக்ய நிர்ம்மாணத்ராண சம்கார காரணாக ஸ்ரீமன் ஸ்ரீரங்கநாதஸ்ய சாசனம் சாஸ்வதம் பரம்.

பொருள்: மூவுலகங்களுக்கும் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகியவற்றின் காரணமான ஸ்ரீரங்க நாதருடைய இந்த சாசனம் சாசுவதமாக சிறந்து விளங்கட்டும். அடுத்து வருகிற வரிகள் எல்லாம் தமிழில் இருக்கின்றன.

1. பொருப்பன்ன மாடம் பொலிந்து
தோன்றும் புதுவையர் கோன்.
2. விஷ்ணுசித்தன் கோதைக்கு
நாம் வரக்காட்டின பிரணயப் பத்திரிகை.
3. பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசை
விளக்காய் நிற்கின்ற
4. நல்லார்கள் வாழும் குளிர் அரங்க
பெருநகருள்
நம்வீட்டில் சேனைவென்றான்
மண்டபத்துச் சுந்தரபாண்டியன்
பந்தல் கீழ் அரியராயன் கட்டிலில்
இருந்து உம்பரும் தும்புரு
நாரதரும் வந்து முகம் காட்ட
அவர்களுக்கு அழக்கோலக்கம்
கொடுத்து இருக்கச் செய்தே
நம் வீட்டில் குடவர், கோவணவர்
பூவிடுவர், தழைவிடுவர், தண்ணீர்
சுமப்பார், தண்டெடுப்பார், அணுக்கர்
கணக்கர் மற்றும் நம் காரியத்துக்குக்
கடவர் எல்லோரும் வந்து நம் கோதை
வீட்டிலின்றும் அர்ச்சகர், குடவர்
கோவணவர், தண்டெடுப்பார், ஸ்ரீராமானுஜ
உடையார் வந்தார்கள் என்று
நாமும் சர்வ பரிகாரமும் அனைத்துக்
கொடுத்துள்ளாரையும் எதிரே போக
விட்டு, நம் வீட்டில் உள்ளாரையும்
கூட்டிக் காண்பித்துக் கொண்டு
தாம் வரக் காட்டின சம்மானமும்
சுவகரிக்கும் அடைவிலே சுவீகரித்தோம்.
தாம் வரக் காட்டின சாசனமும் வாசித்துக்
காட்ட அறிந்து கொண்டோம். தாம்
சொல்லிவரக் காட்டின படியாவது
நாம் பதினாறாமாயிரவர் தேவிமாருடனே,
பெரிய மண்டபத்தில் வினோதித்து
இருந்தோமென்று தம் சுற்றத்துத் தோழிமார்
நமக்குச் சொல்ல அப்போது தாம்
புண்ணிற் புளி பெய்தாற் போலேயும்
வேலாற் துன்னம் பெய்தாற் போலேயும்

நெஞ்சுடுருவ வேவுண்டு நிலையும்
தளர்ந்து,
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை
தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந்
தென்னழலைத் தீர்வேனே
என்றும் உள்ளே உருகி நைந்து
தாம் நம்மைப் பொறுத்தமிலி என்றும்
புறம்போல் உள்ளும் கரியான்
பெண்ணின் வருத்த மறியாத பெருமான்
வஞ்சகக் கள்வன், மாமாயன், பாம்பணை
யார்க்குத் தம் பாம்புபோல நாவும்
இரண்டுள வாய்த் (து) நாணிலி
என்றும் தாய் சொல்லி வரக்காட்டினது
தாம் மாமியார் மக்களாகையாலும்
நாம் மாமனார் மக்களாகையாலும்
நம் திறந்தூடல் கண்டுவப்ப வேண்டிச்
சொன்னதாயிருக்கும்.
நாம் முப்பத்து மூவர் அமரர்க்கும் முன்
சென்று கப்பம் தவிர்ப்பது
காரியம் ஆகவும் தேவரகசியமாகவும்
பெரிய மண்டபத்தில் இருந்தோம்
தாம் மணவாளர் வைத்த பரிசிலே
இருந்தோம் என்றும் நாங்கள்
எம்மில் இருந்து ஒட்டி அகச் சங்கம்
நானும்வந்து மறிந்து மென்றும்
பாசி தூர்ந்துகிடந்த பார்மகட்டுப்
பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனைகள் பேர்க்கவும் பேராவே
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே யாங்கவனைக்
கைப்பிடித்த
பெண்ணாளன்
என்றும் செம்மையுடைய திருவரங்க
மென்றும்
சொன்னபடியே நாம் தம்மை யல்லது
வேண்டுவதில்லை. தம் வீட்டில் உள்ளவர்
களைத் தாங்க நிறுத்தி நில்லாமல்
வரக்காட்டச் சொன்னபடியே
அவர்களுக்கு வேண்டு சத்காரங்களும்
செய்து தமக்கு நாம் என்றும்
பல்லக்கும் நாம் இருக்கும் குடையும்
நாம்பூணும் கண்டமாலை ஆபரணங்களும்
பட்டு படுத்தி சுகந்த
திரவியங்களும் வேண்டுமட்டும் கொடுத்துத்
தமக்கு அடுக்களைப்புறமாக நமக்கு

1. பூர்வம் நடந்து வருகிற சீர்மையில்
விட்ட சகாப்தம் கூஙஎலரு
மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக
வருஷம் மீன ஞாயிற்றுப் பூர்வ
2. பக்ஷத்து ஏகாதசியும் புதவாரமும்
பெற்ற உத்தரத்து நாள்
3. உறங்காவல்லி தாசன் ஆன மகாபலி
வாணாதீராயர் சீர்மையான
மதுரை மண்டலத்து முட்ட நாட்டுத்
4. திடியன் ஆன திருவரங்கநல்லூர்
எல்லையாவது

5. மேலெல்லை – புத்தூர் மலைக்கும் வயிரவன் பற்றுக்கும் கிழக்கு. வடவெல்லை – வாரந்தாழுர் தானம் செய்த சொத்தின் எல்லை. பற்றுக்கும் தெற்கு கீழெல்லை – கருமாத்தூரயில் குளத்துக்கு மேற்கு தென்னெல்லை புளியஞ்சோலைக்கும் குத்துக்கல்லுக்கும் வடக்கு இந்நான்கெல்லைக்கும் உள்பட்ட மாவடை மரவடை பட்டடை பதி முதல் மற்றும் எப்பேர்பட்ட சமஸ்தப் பிராப்திகளும் கைக்கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும். இப்படிக்கு திருவாய் மொழிந்தருளினமைக்கு அருளால் திருமந்திர ஓலை நாயகர்.

(இந்தக் கல்வெட்டிலே அரங்கன் வேறு தேவிமாருடன் ஆனந்தமாக இருப்பதாகத் தோழியர் சொல்லக் கேட்ட ஆண்டாளுக்கு வருகிற கோபம். தத்ரூபமாக வந்திருக்கிறதைக் காணலாம். அந்தச் செய்தி கேட்டதும் அவருக்குப் புண்ணில் புளி பெய்தாற் போலிருந்ததாம்; வேல் பாய்ந்தது போலாகிவிட்டதாம், "உன் உடம்பு போலவே உனக்கு மனசும் கறுப்பு, நீ உன் பாம்பணை போல இரண்டு நாவு உடையவன். வெட்கமே உனக்குக் கிடையாது, வஞ்சகக் கள்வன்...... என்றெல்லாம் அரங்கனைத் தூற்றுகிறது துடித்துப் போன அவள் நெஞ்சு!

"அப்படி எல்லாம் இல்லை. காரியம் ஆகவே தேவரகசியமாக இப்படி எல்லாம் இருக்கிறேன். கோபிக்காதே.

என்று அரங்கன் சொல்லித் தன் நேசத்தைக் காட்ட இந்தத் தானத்தைச் செய்கிறோம்.)

சாசன மாலை

(S. ராஜம், 1960)

உறங்காவில்லி தாசனான மாவலி வாணாதிராயன் (கி.பி. 1454)

ஏதத் த்ரைலோக்ய நிர்மாண த்ராண ஸம்ஹார காரணம், ஸ்ரீமன் ஸ்ரீரங்கநாதஸ்ய சாசனம் சாஸ்வதம் பரம்.

'பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன் விஷ்ணுசித்தன்'[1]

கோதைக்கு நாம் வரக்காட்டின ப்ரணய பத்திரிகை

'பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்து நாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ்ச, திசை விளக்காய்
நிற்கின்ற'

நல்லார்கள் வாழும் நளிர் அரங்கப் பெரு நகருள், நம் வீட்டில் சேரனை வென்றான் மண்டபத்துச் சுந்தர பாண்டியன் பந்தல்கீழ், அரியராயன் கட்டிலில் இருந்து உம்பரும் தும்புரு நாரதர் வந்து முகம் காட்ட, அவர்களுக்கு அழகு ஓலக்கம் கொடுத்து இருக்கச் செய்தே, நம் வீட்டில் — குடவர், கோவணர், பூவிடுவர், தழை விடுவர், தண்ணீர் சுமப்பார், தண்டெடுப்பார், அணுக்கர், கணக்கர், மற்றும் நம் காரியத்துக்குக் கடவர் எல்லோரும் வந்து - நம் கோதை வீட்டினின்றும் அர்ச்சகர், குடவர், கோவணர், தண்டெடுப்பார், ஸ்ரீராமாநுஜ உடையார் வந்தார்கள்' என்று நாமும் சர்வ பரிகரமும் அனைத்துக் கொத்துள்ளாரையும் எதிரே போகவிட்டு, தம் வீட்டில் உள்ளாரையும், கூட்டிக் காண்பித்துக் கொள்ளும் அடைவிலே காண்பித்துக் கொண்டு, தாம் வரக்காட்டின சம்மானமும் சுவீகரிக்கும் அடைவிலே சுவீகரித்தோம். தாம் வரக்காட்டின சாசனமும் வாசித்துக் காட்ட அறிந்துகொண்டோம். தாம் சொல்லிவரக் காட்டின படியாவது நாம் பதினாறாமாயிரவர் தேவிமாருடனே, பெரிய மண்டபத்திலே, விநோதித்திருந்தோம்

என்று, தம் சுற்றத்துத் தோழிமார் தமக்குச் சொல்ல அப்பொழுது தாம் புண்ணிற் புளி பெய்தாற் போலேயும், வேலால் துன்னம் பெய்தாற் போலேயும், நெஞ்சு ஊடுருவ வேவுண்டு, நிலையும் தளர்ந்து,

கொள்ளும் பயன் ஒன்று இல்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில்
எறிந்து என் அழலைத் தீர்வேனே'

என்றும் உள்ளே உருகி நைந்து, தாம் நம்மைப் பொருத்தமிலி என்றும் புறம்போல் உள்ளும்கரியான், பெண்ணின் வருத்த மறியாத பெருமான், 'வஞ்சகக் கள்வன் மாமாயன்' 'பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவும் இரண்டுள வாய்த்து நாணிலி' என்றும், தாய் சொல்லிவரக் காட்டினது தாம், மாமிமார் மக்களாகையாலும், நாம் மாமனார் மக்களாகை யாலும், நந்திறத்து ஊடல் கண்டு உவப்ப வேண்டிச் சொன்னதா யிருக்கும். நாம் முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்ப்பது' காரியம் ஆகவும், தேவரகசியமாகவும், பெரிய மண்டபத்தில் இருந்தோம். தாம் மணவாளர் வைத்த பரிசிலே இருந்தோம் என்றும், நாங்கள் எம்மில் இருந்து ஒட்டி அகச்சங்கம் நானும் அவனும் அறிந்தும் என்றும்,

'பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்கு, பண்டு ஒரு நாள்
மாசு உடம்பில் நீர் வாரா மானம் இலாப் பன்றி ஆம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே'

என்றும்,

'திண் ஆர்ந்திருந்த சிசுபாலன் தேசு அழிந்து
அண்ணாந்து இருக்கவே ஆங்கு அவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன்'

என்றும் 'செம்மையுடைய திருவரங்கர்' என்றும் சொன்னபடியே நாம் தம்மை அல்லது வேண்டுவதில்லை. தம் வீட்டில் உள்ளவர்களை தாட்க நிறுத்தி நில்லாமல் வரக் காட்டச் சொன்னபடியே, அவர்களுக்கு வேண்டும் சத்காரங்களும் செய்து, தமக்கு நாம் என்றும் பல்லக்கும் நாம் இருக்கும் குடையும், நாம் பூணும் கண்டமாலை ஆபரணங்களும், பட்டு பருத்தி ஸுகந்த.

திரவியங்களும் வேண்டுமதும் கொடுத்து, தமக்கு அடுக்களைப் புறமாக நமக்குப் பூர்வம் நடந்து வருகிற சீர்மையில் விட்ட சகாப்தம் 1375 மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம், மீன ஞாயிற்று, பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் புதவாரமும் பெற்ற உதிரத்து நாள், உறங்கா வில்லிதாஸன் ஆன மஹாபலி வாணாத ராயர் - சீர்மையான மதுரை மண்டலத்து முட்டநாட்டுத் திடியன் ஆன திருவரங்க நல்லூர் எல்லையாவது மேல் எல்லை, புத்தூர் மலைக்கும் வயிரவன்பற்றுக்கும் கிழக்கு, வட எல்லை வாரந்தூர்ப் பற்றுக்குத் தெற்கு, கீழ் எல்லை, கருமாத்தூரில் குளத்துக்கு மேற்கு; தென் எல்லை புளியஞ்சேர்லைக்கும் குத்துக்கல்லுக்கும் வடக்கு; இந்நான்கு எல்லைக்கும் உள்பட்ட, மாவடை, மரவடை, பட்டடை பதிமுதல் மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்தப் பிராப்திகளும் கைக்கொண்டு, கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும், இப்படிக்குத் திருவாய் மொழிந்தருளினமைக்கு அருளால் திரு மந்திர ஓலை நாயகம் ஸ்ரீரங்கநாதப் பிரியன் எழுத்து.

(இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர், சூடிக் கொடுத்த நாச்சியார் கோயிலில் உள்ளது.)

(சாசனத்தில் குறித்த மேற்கோள்: 1. நாச்சியார் திருமொழி 1:10, 2. பெரியாழ்வார் திருமொழி 4,9,6; 3. நாச்சியார் திருமொழி 13,8; 4. நாச்சியார் திருமொழி 10,3,;5. நாச்சியார் திருமொழி 11,8; 6. நாச்சியார் திருமொழி 11,9; 7. நாச்சியார் திருமொழி 11,10,)

ஸ்ரீ பால சுபிக்ஷம்



இராமசுப்பிரமணியன்

ஸ்ரீ பாலசுபிக்ஷம்
இராமசுப்பிரமணியன்